මධ්‍යම පළාත් සභාවේ අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மத்திய மாகாண சபையின் கல்வித் திணைக்களம்
**DEPARTMENT OF EDUCATION - CENTRAL PROVINCE**

# ஆண்டிறுதிப் பரீட்சை - 2017

**10161**

தரம் - 10

## தமிழ் மொழியும் இலக்கியமும் - I

நேரம் : 1 மணித்தியாலம்

***கவனிக்குக.***

- **எல்லா வினாக்களக்கும் விடை எழுதுக. வினாத்தாள் *(1)* இற்குரிய புள்ளிகள் 40 ஆகும்.**
- **1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் *(1), (2), (3), (4)* என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**
- **உமக்கு வழங்கப்பட்ட விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் எண்ணை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை *(x)* இடுக.**

- **பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்திற் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1) 'கார் தட்டிய பஞ்சகாலத்திலே தங்கள் காரியப்பேர்' இங்கு **கார்** என்பது
1. மழை 2.வெயில் 3.நிழல் 4.குளிர்

2) 'தப்பியகந்தை பீதாம்பரம் போல்............' இங்கு **'தப்பிய'** என்பதன் பொருள்
1.கிழிந்த 2.பிழைத்த 3.தட்டிய 4.துவைத்த

3) 'கொங்கர்க் கமராபதியளித்த இராசகுலதிலகா' இங்கு **'அளித்த'** என்பதன் எதிர்ச்சொல்.
1. நீக்க 2.கொடுத்த 3.பெற்ற 4.வைத்த

4) 'காவற் பரணிற் கண்ணுறங்கும் வேளையிலே.........' இங்கு **'உறங்கும்'** என்ற சொல்லின் எதிர்ப்பதம்.
1. விளிக்கும் 2.நித்திரைக் கொள்ளும் 3. விழிக்கும் 4.விலிக்கும்

5) 'மந்தி சிந்து கனிகளுக்குவான் கவிகள் கெஞ்சும்.' இதில் வந்துள்ள **'மந்தி'** என்பதன் எதிர்பாற் சொல்
1. வானரம் 2.குரங்கு 3.கடுவன் 4.பிணை

- **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

6) 'களவெட்டி' என்ற கிழக்குப் பிரதேச வழக்குச் சொல்லின் பொது வழக்கு
1.பற்றை 2.சிறுகேணி 3.வயல் வெளி 4. சூட்டுக்களம்

7) வெங்கதிரோன் தானும் விதர்ப்பன் திருமடந்தை
மங்கள நாள் காணவருவான் போல்........ இப்பாடல் இடம்பெறும் இலக்கியம்
1. இராமாயணம் 2.நளவெண்பா 3.மகாபாரதம் 4.பாரதியார் கவிதைகள்

8) பின்வருவனவற்றுள் தனிநபர் விழாவாகக் கருதப்படுவது
1. தொடக்கவிழா 2. முத்தமிழ் விழா
3. வளைகாப்புவிழா 4.வெள்ளிவிழா



kalvi.lk
Scanned by CamScanner

9) அரசு, ஆல் என்பவற்றின் இலைக்குரிய மரபுப்பெயர்
1. குலை 2.தாள் 3.இலை 4.ஓலை

10) ஆயுள் முழுவதும் பிரமச்சாரிய விரதம் காத்து வாழ்பவன்
1. சிரஞ்சீவி 2.பிரமச்சாரி 3. நைட்டிகன் 4.விகடகவி

11) பிஞ்சு, தழும்பு, காயம் என பலபொருள் குறிக்கும் ஒரு சொல்
1. வடு 2.புண் 3.அடையாளம் 4.மலர்

12) சனத்திரள் என்பது போல அறிஞர் கூட்டம்
1. கும்பல் 2. கூட்டம் 3.அவை 4.தொகை

13) 'மௌஸ் (Mouse) என்பதன் தமிழ் வடிவம்
1. சுட்டி 2.எலியம் 3.சுட்டிவைக்கும் திண்டு 4.அடைவு

14) 'கண்திறத்தல்' என்ற பொருள் தரும் மரபுத்தொடர்
1. அறிவுஉண்டாதல் 2.இறத்தல் 3.விழித்தல் 4. அவதானித்தல்

15) அனுபவம் பழுத்து அவ்விடம் அறிவு'தேஜஸ்' சட்டெனத் தெரியும். 'தேஜஸ்' என்ற சொல்லின் தமிழ் வடிவம்
1. ஒலி 2.ஒளி 3.ஒழி 4.ஞானம்

16) 'சுள்சுள்' என்பது
1.இணைமொழி 2.அடுக்குத்தொடர்
3. இரட்டைக் கிளவி 4.அடுக்கிடுக்குத்தொடர்

17) பொது மக்களுக்காக அரங்கிலே ஆடப்படும் கூத்து
1. வடமோடிக்கூத்து 2. பொதுவியல் 3.அரங்கியல் 4.காமன் கூத்து

18) 'பாடசாலையின் பொன் விழா நிகழ்வுகள்' இத்தலைப்பு பின்வருவனவற்றுள் எவ்வகைக் கட்டுரைக்குள் அடங்கும்
1. தற்சார்புக்கட்டுரை 2. வருணனைக்கட்டுரை
3. கற்பனைக் கட்டுரை 4. விவரணக்கட்டுரை

19) 'நன்றி உணர்வை விளக்கும் பழமொழி.
1. தருமம் தலைகாக்கும்.
2. பாத்திரமறிந்து பிச்சை இடு.
3. உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
4. இட்டுக்கெட்டார் எங்கும் இல்லை.

20) கொலுசு, சந்தடி என்பன எம்மொழிச் சொற்கள்
1. தெலுங்கு 2.பிரெஞ்சு 3.மலையாளம் 4. இந்தி

- **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.**

21) இருதிணைப் பொதுப் பெயராகவரும் சொற்களின் தொகுதி
1. தந்தை, தாய் 2. பிடி, பிணை
3.அகதி, நோயாளி 4. விறலி, பாடினி

www.Paritchai.com
kalvi.lk
Scanned by CamScanner

22) 'நடக்கமாட்டான்' இதிலுள்ள எதிர்மறை இடைநிலை
1.நட 2. மாட்டு 3. மாட் 4.ஆன்

23) பின்வருவனவற்றுள் கூட்டுப்பெயர் அல்லாதது.
1. மின்சாரநிலையம் 2.படைப்பாளி 3.நீரூற்று 4.வாசிகசாலை

24) 'நீ நல்லவர்களோடு சேருகிறாய். நிச்சயம் வாழ்வில் உயர்வாய்.' இதில் வந்துள்ள வழுவமைதி.
1. திணை 2.பால் 3.இடம் 4.காலம்

25) ஆசிரியர் ஏழு மணிக்கு வரச்சொன்னார். இதில் நான்காம் வேற்றுமைப் பொருள்
1. எல்லைப்பொருள் 2.காலக்குறிப்புப்பொருள்
3. அனுபவப்பேறு 4.வினையடையாக்கம்

26) பன்மைவிகுதி பெற்று வரக்கூடிய சொல்
1. மின்னல் 2. சந்தர்ப்பம் 3தண்ணீர் 4. குளிர்

27) இம்முறை போதுமான மழை பெய்தது. நெல் விளைச்சல் அதிகரிக்கவில்லை. இவ்வாக்கியங்களை இணைப்பதற்கு பொருத்தமான இணைப்பிடைச் சொல்
1. ஆகவே 2. ஏனென்றால் 3.அத்துடன் 4.எனினும்

28) த், ட் என்பவற்றின் இன எழுத்துக்கள்.
1. ங், ஞ் 2.ந், ண் 3. ய், ல் 4. ட், த்

29) எதிர் பொருளைக் குறிக்கும் இரு சொற்கள் இணைந்த இணைமொழியல்லாதது.
1. ஆதியந்தம் 2. தில்லுமுல்லு 3. ஏற்றஇறக்கம் 4. இன்பதுன்பம்

30) 'சிறுகால்' என்பது எவ்வகைப் புணர்ச்சி
1. தோன்றல் 2. திரிதல் 3. இயல்பு 4.கெடுதல்

- **புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

31) அரசன் எவ்வழி செல்கின்றானோ குடிகளும் ..................
1. அங்ஙனமே செல்வர் 2. எவ்வழியே செல்வர்
3. அவ்வழியே செல்வர் 4. அவ்வாறே செல்வர்

32) வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டும் கூட அவர்களது முயற்சி............
1. கைகூடியது 2. கைகூடும் 3. கைகூடலாம் 4.கைகூடவில்லை

33) உள்ளுராட்சிச் சபை தேர்தலில் போட்டியிடும் ............. தெரிவுக்கான திகதி அறிவிக்கப்பட்டது.
1. வேட்பாளர் 2. அங்கத்தவர் 3. கட்சியினர் 4.ஆதரவாளர்

- **முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.**

34) அயராது முயற்சி செய்பவர்களாலேயே வாழ்க்கையில் முன்னேற்றம்
1. கண்டார்கள் 2.காண்பார்கள் 3.காணமுடியும் 4.காணமுடியாது

www.Pariksha.com Education



Scanned by CamScanner

35) இந்தியப் பிரதமரைப் பார்வையிட மக்கள் அணி அணியாக
1. திரட்டப்பட்டது. 2.திரட்டப்பட்டன. 3.திரண்டனர் 4.திரண்டது

36) அகதிமுகாமில் வாழும் மக்களுக்காக மாணவர்களால் நிதி
1.சேகரிக்கப்பட்டது 2.சேகரித்தார்கள்
3. சேகரித்தனர் 4.சேகரிக்கப்பட்டார்கள்

37) எங்கள் வீட்டுக்கு வந்தாலன்றி நான் ,அவனைப்
1. பார்ப்பேன் 2.பாரேன் 3.பார்ப்பேனல்லன் 4.பார்ப்பேனன்று.

38) பின்வருவனவற்றுள் வழுவற்ற வாக்கியமாக அமைவது
1. ஆதிக மழை பெய்ததால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது
2. நாம் எமது கலாச்சாரத்தைப் போற்றவேண்டும்.
3.நாகரீக வளர்ச்சியால் மனிதன் அவதிப்படுகிறான்.
4. கூட்டத்திற்கு பலர் சமூகமளித்தனர்.

39) பின்வருவனவற்றுள் திருத்தமான சொற் கூட்டத்தை தெரிவு செய்க.
1. முயற்ச்சி, செய்யுல், ஆபரணம், நிவாரணம்
2. முயற்சி, செய்யுள், ஆபரணம், நிவாரணம்
3. முயற்ச்சி, செய்யுழ், ஆபரனம், நிவாரனம்
4. முயற்சி, செய்யுல், ஆபரனம், நிவாரணம்

40) கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குப் பெறவைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்கு மிகப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.
(அ) எனவேதான் பல்லுயிர்களையும் பாங்குடன் ஓம்பும் நல்லுள்ளம் வாய்த்திருக்கிறது.
(ஆ) இன்றைக்கு இந்த நிலை மாறிவிட்டது.
(இ) பண்டைத் தமிழ் மக்கள் இயற்கையைப் பாதுகாத்தும், நேசித்தும் வாழ்ந்திருக்கிறார்கள்
(ஈ) மனிதனின் ஆசைகள் அளவுகடந்து இயற்கையைச் சீரழிக்கும் சிறுமைக்குள் சென்றுவிட்டன.
(உ) வானம் மும்மாரி பொழிந்து வளம் செழித்திருக்கிறது.
1. இ,அ, உ, ஆ,ஈ 2. ஈ, உ, அ, இ, ஆ
3. உ, இ, அ,ஈ, ஆ 4 இ, உ, அ,ஈ, ஆ



www.Paritchai.com
kalvi.lk
Scanned by CamScanner

தரம் - 10 ஆண்டிறுதிப் பரீட்சை - 2017 10150

# தமிழ் மொழியும் இலக்கியமும் - II

நேரம் : 2 மணித்தியாலம்

**கவனிக்குக.**

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.**

**01. சுருக்கமான விடை தருக.**

I. பின்வரும் தொடரைச் சந்திபிரித்து எழுதுக.
வெண்டிரைமேய வெழுந்திடுமன்றே

II. பின்வரும் தொடரின் எழுவாய், பயனிலைகளைத் தருக.
தனிவிசும்பிற் தவழ்ந்திடுவாய் வெண்ணிலாவே.

III. அறிக்கைகளின் வகைகள் இரண்டு தருக.

IV. (அ) வேற்றுமைகளில் அதி கூடிய உருபுகள் உள்ள வேற்றுமை எது?
(ஆ) அவ் வேற்றுமை எப்பொருளில் வரும்?

V. புத்தகம், வைக்கோல் என்பவற்றின் கூட்டத்தைக் குறிக்கும் மரபுச்சொற்களின் பெயர்களைத் தருக.

VI. 'அவள் என்ரை அண்ணற்றைமோள்.' திருந்திய வடிவில் தருக.

VII. வாளெடுத்தான், கோயிற்புறா என்பன எவ்வகைப் புணர்ச்சி?

VIII. வந்தான், கண்டேன் என்பவற்றின் பகுதியைத் தருக.

IX. இனி தாங்கமாட்டேன், வீட்டுக்குப் போவேன். என்பன எவ்வகைத் தொடர்கள்.

X. ஔவை மூதாட்டி அவசரமாக வந்துக்கொண்டிருக்கிறார்.
அவர் கோபத்தோடு இருப்பது தெரிகிறது.
மேற்படி தனிவாக்கியங்களைக் கூட்டுவாக்கியமாக்குக.

**(20 புள்ளிகள்)**

**02. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்திற்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.**

1) பிள்ளைகளின் வாழ்வு என்பதில் பிரிக்க முடியாத நிறுவனம் குடும்பம் ஆகும். இக்குடும்பம் தம் பிள்ளைகளுக்குரிய கல்வியை வழங்குதல் என்பது வெறுமனே தொழில் வாய்ப்புக்கு மட்டுமே என்று எண்ணாது, அவர்களை நற்பண்புகளும், தொழில் புரியும் ஆற்றலும் ,சுயபுரிதலும், சுயநம்பிக்கையும், ஆளுமையும் கொண்ட குடிமக்களாக உருவாக்க வழிசமைக்கும் வகையில் வழிகாட்டலை மேற்கொள்ள வேண்டும் என்ற கருத்திலமைந்த ஒரு விளக்கக் கட்டுரை.

2) ஆதி மனிதன் சூழலோடு ஒன்றி வாழ்ந்தான். எனவே அன்றைய இயற்கை சூழலானது பசுமைத் தோற்றத்துடன் சௌந்தரியமாகக் காட்சியளித்தது. நவீன மனிதனோ இயற்கையின் அரவணைப்பான சூழலை சூறையாடி இயற்கை அழகை மாற்றியமைத்தான். எனவே சூழல் மாசடைவது தவிர்க்க முடியாத பிரச்சினையாய் உருவெடுத்துள்ளது என்னும் நோக்கிலமைந்த ஒரு மேடைப் பேச்சு.



kalvi.lk
Scanned by CamScanner

3) பொதுமக்களுடன் செய்திகளைப் பரிமாற்றம் செய்துகொள்ளும் சாதனங்களை வெகுசன தொடர்புச்சாதனங்கள் என்கின்றோம். இச்சாதனங்கள் யாவும் தற்போது வெறும் பொழுதுபோக்குக்காக நிகழ்த்தப்படுபவையாகக் காணப்படுகின்றன. வர்த்தக நோக்கின் அடிப்படையில் செயற்படும் இவை சிறுவர்களின் மனதிலே மூடநம்பிகைகளை ஏற்படுத்தி சிந்திக்க முடியாநிலையில், மூளையிலேயே பயந்தாங்கொள்ளிகளாக உருவாக்க முற்படுகின்றன. இன்றைய சின்னத்திரைகள் பல இவற்றை பறைசாற்றுகின்றன. இவை உடனடியாக தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று. என்ற பொருளிலமைந்த இருவருக்கிடையிலான உரையாடல்.

4) நன்மை செய்தால் நன்மை விளையும். தீமைசெய்தால் தீமை விளையும் என்பதை நன்கறிந்தவன் கமல். அவனுடைய வளர்ப்பும் அவ்வாறாகவே இருந்தது. நன்றாகப் படித்து உயர் பதவியை பெற்ற அவன் பதவி மோகத்தால் அனைத்தையும் மறந்தான். மற்றவர்களின் மனநிலை உணராது நிந்திப்பது, கூடாது விமர்சிப்பது, அடக்கியொடுக்குவது, வஞ்சக வார்த்தைகள் பேசுவது, நல்லவன் போல் நடிப்பது, மற்றவர்களை கேவலமாக நினைப்பது என அவனுடைய தொல்லைகள் தொடர்ந்தன. கால ஓட்டத்தில் சில மாதங்களுக்கு முன்னால் ஓய்வு பெற்ற கமல் இப்போது தனி மனிதனானான். அடக்கப் பட்டவர்கள் நேரடியாகவே திட்டத் தொடங்கினர். யாரும் அவனை மதிப்பதில்லை. இப்போது தன்நிலையை எண்ணி வருந்துகிறான் கமல். இதனை அடிப்படையாகக் கொண்ட ஒரு சிறுகதை.

**(25 புள்ளிகள்)**

**03. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 – 45 சொற்களில் அமையுமாறு எழுதுக.**

ஊக்கமும் உளவலிமையும் உண்மையில் பற்றுமில்லா மாக்களுக்கு ஒரு கணமாவது வாழத் தகுதியுண்டா? உயர்ந்த எண்ணங்களும் காரியத்தில் உறுதியும் இல்லாதவர்கள் பாரதிவிழா கொண்டாடி என்ன பிரயோசனம்? ‘எட்டுத்திக்குகளுக்கும் சென்று அங்குள்ள கலைச்சொற்களையெல்லாம் கற்றறிந்து கொணர்ந்திங்கு சேர்க்கவேண்டும்’ என்றான் பாரதி. எமது சமூகம் தாழ்வுப்பட்டுக் கிடப்பதற்கு எம்மிடையே காணப்படுகின்ற சாதிக் கொடுமைகளே காரணம். இக்கொடுமைகளைக் களைத் தெறிந்தால் சமுதாயத்தில் உயர்வினைக் காணலாம் என்றவனும் அவனே. பெண்ணினத்தை அடிமைப்படுத்தும் சமூகம், என்றும் தலை நிமிரமுடியாது. வீட்டில் ஒற்றுமை வளர்ந்தால்தான் நாட்டில் ஒற்றுமை வளரும். பாரதி விழாக்களிலே பாரதியின் கொள்கைகளை வலியுறுத்துவது இதற்கு துணைசெய்யும். தமிழினத்துக்கு மட்டும் பாரதியின் பாடல்கள் உரியவையல்ல.

தமக்கு வந்த தொல்லைகளை ‘தூ’ எனத் தூரத் தள்ளியவன் பாரதி. தூயத் தமிழ் பாடிய பாரதிவாதிச் சடங்குகளை சீறியெதிர்த்துச் சிங்கநாதஞ் செய்தவன். தீண்டாமைப் பேயை தீயிட்டுப் பொசுக்காத நாம், ‘தகரென்று கொட்டு முரசே! பொய்மைச் சாதி வகுப்பினை எல்லாம்’ என்று பாடிய பாரதியைப் போற்றுகின்றோம். பாரதியின் இந்த எண்ணம் சாதிபேதங்களுக்கு சமாதிகட்ட வேண்டும். சமூகத்தின் பாதியாக விளங்கும் பெண்கள் அடிமைகளாய் அல்லலுறல் ஆகாது. சாதிக் கொடுமை, பெண்ணடிமை நீங்கும் போது சமூகம் எழுச்சி பெறும். பாரதியின் உயர்ந்த நோக்கம் போல மனித ஜாதியை மதித்து வாழ வேண்டும். புல நாடுகளிலும் காணும் புதுமைகளை எம்மக்கள் சென்று கற்று அவற்றை எமது நாட்டின் வளர்ச்சிக்குப் பயன்படுத்த வேண்டும்.

**(10 புள்ளிகள்)**



www.Paritchai.com
kalvi.lk
Scanned by CamScanner

**04. கீழ் வரும் உரைநடைப் பகுதியை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவதால் அவர்களின் கல்வி, பொழுதுபோக்கு, விளையாட்டு, எனபவற்றிற்கான உரிமை பாதிக்கப்படுகிறது. மேலும் இச் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதால் கல்வியறிவற்ற, உடல், உளரீதியாக பாதிப்படைந்த சிறுவர்களைக் கொண்ட ஒரு மனிதச் சட்டம் செயற்கையாக உருவாக்கப்படுகிறது. இது அந்த சிறுவர்களை மாத்திரமன்றி முழுமனித சமூகத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. மேலும் இது நாகரிகமடைந்த மனித சமூகத்தின் மனச்சாட்சிக்கு விரோதமான செயலாகும். சட்டங்களால் மட்டும் இதை தடுத்து விடமுடியாது. சட்டத்திற்கு எதிரான குற்றமுமாகவும், பாரிய சமூகவிரோதச் செயலாகவும் விளங்கும். இதனை தடுத்து சிறுவர்கள் மனித உரிமைகளை அனுபவிப்பதற்கான வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுப்பது முழு சிவில் சமூகத்தின் பொறுப்பாகும். இதனை வலியுறுத்தவதற்காக ஐக்கியநாடுகள் சபை 2002 ஆம் ஆண்டு யூன் மாதம் 12ஆம் திகதியை சிறுவர்களை வேலைக்கமர்த்துவதற்கு எதிரான தினமாகப் பிரகடனப்படுத்தியது. உண்மையில் இத்தினத்தின் முக்கியத்துவத்தை கவனத்தில் எடுக்கும்போது இத்தினத்தை 'மனசாட்சித்' தினம் என்று பெயரிட்டாலும் தவறில்லை.

I. இவ்வுரைப் பகுதியின் மையக் கருத்து யாது?

II. சிறுவர்களை வேலைக்கமர்த்துவதால் ஏற்படும் பாதிப்புக்களாக கூறப்படுபவை எவை?

III. 'பிள்ளைகளை வேலைக்கமர்த்துவது நாகரிகமடைந்த மனித சமூகத்தின் மனச்சாட்சிக்கு விரோதமான செயல்' என்ற கூற்றினூடாக நீர் விளங்குவது யாது?

IV. ஐக்கியநாடுகள் சபை, 'சிறுவர்களை வேலைக்கமர்த்துவதற்கு எதிரான தினத்தைப் பிரகடனப்படுத்தியமைக்கான காரணம் யாது?

V. பின்வரும் சொற்களுக்கான பொருளைத் தருக.
அ. விரோதமான ஆ. சிவில

**(10 புள்ளிகள்)**

05. 'டெங்கு ஒழிப்பு' தொடர்பான ஜனாதிபதியினால் பிரகடனப்படுத்தப்பட்ட 'சிரமதான செயற்றிட்டம்' கடந்த மாதங்களில் இலங்கையிலுள்ள சகல பாடசாலைகளிலும் இடம்பெற்றன. இந்த செயற்றிட்டத்திற்கு உள்வாங்கப்பட்ட 'உமது பாடசாலையில் நடத்தப்பட்ட சிரமதானம்' பற்றிய அறிக்கை ஒன்று எழுதுக.

அல்லது

"குப்பைகளை அகற்றல்" இலங்கையில் இன்று பாரிய பிரச்சினையாக உள்ளது. இதனை தடுக்க அரசாங்கம் பல முயற்சிகளை எடுக்கும் அதே வேளை பல சவால்களையும் எதிர்நோக்குகின்றது. இதனை ஆதாரமாகக் கொண்டு கழிவகற்றல் தொடர்பான உமது ஆலோசனைகள் உள்ளடங்கும் வகையில் பத்திரிகைக் கடிதம் ஒன்று எழுதுக.

**(15 புள்ளிகள்)**



kalvi.lk

Scanned by CamScanner

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by

**Pathmanathan Pathmaraj**

(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**

**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page